முருகப்பெருமான் துணை

**மகான் சூரியானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

02.09.2021, வியாழக்கிழமை

1. ஞானபலம் கொண்ட உலகை
   ஞானிகள் துணை கொண்டமைக்க
   ஞானதேசிகன் காட்டும் மார்க்கம்
   ஞானபண்டிதன் மார்க்கமாக இருக்க
2. இருக்கவே ஓங்காரக் குடிலை
   இவ்வுலகின் மக்கள் அனுகிவர
   கருத்தாக மாற்றம் நிகழுமென
   கண்டுரைப்பேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை பிலவ யாளி திங்கள்
   அறிவிக்க மூவையீர்திகதி குருவாரம்
   (பிலவ வருடம் ஆவணி மாதம் 17ம் நாள், 02.09.2021 வியாழக்கிழமை)
   ஆசிதனை சூரியானந்தர் யானும்
   அருளுவேன் உலகநலம் காண
4. நலம் தரும் மகாசக்தி கொண்டு
   நன்மைகளை உலகில் செய்ய
   பலமான சன்மார்க்கம் கொண்டு
   பரோபகாரம் அருளும் அரங்கன்
5. அரங்கன் சக்திவழி இணையும்
   அனைத்து உலகளாவிய அடியவர்கட்கும்
   வரங்கள் பெருகி வழிகாட்டலாக
   வையகத்தை சரவணச்சுடர் காக்கும்
6. காக்கவே அரங்கன் வளர்க்கும்
   கருணை மிகுந்த தர்மமும்
   தேக்கமின்றி மக்களை இணைத்து
   தெய்வ பலத்தையும் தந்தருளும்
7. அருளாக அரங்கன் ஆசி
   அறமாக அரங்கன் தர்மம்
   பெருமளவில் சிறந்து இனிதே
   பேருலகம் ஞான பூமியாகும்
8. ஆகவே உலகை மாற்றவல்ல
   ஆக்கப் பூர்வ ஞான சக்தியாக
   மகான் அரங்கன் வெளிப்பாடு
   மண்ணுலகை மீட்பதாக இருக்க

9. இருக்கவே சுத்தசைவ நெறி
எக்காலமும் மீட்கும் வண்ணமாக
கருத்தாக உலகில் பரவியே
கலித்துன்பம் விரட்டப்பட வேண்டி

10. வேண்டியே தொடர் வழிபாடும்
விடாது தொடர் அன்னதானமும்
தொண்டென உலகோர் கடைபிடிக்க
தேசிகன் அருளால் தேற்றம்பெறுவர்

11. தேற்றம் தரும் நாயகனே
தெய்வ நெறிகொண்ட அரங்கனே
மாற்றம் உன்னால் சடுதி காணுமப்பா
மொழிந்திட்ட துல்லிய ஆசி முற்றே

—சுபம்—